
மாண்புமிகு மாத்தூர்



டாக்டர் வ. தேனப்பன்

மாண்புமிகு மாத்தூர்

"கோயில் கலை அறிஞர்"
டாக்டர் வ. தேனப்பன்
M.A., Ph.D., P.G.D.H.E., C.J., C.I.A., D.G.T.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ சேவுகன்-அண்ணாமலை கல்லூரி,
தேவகோட்டை 630 303.

மாண்புகள்

உ

சிவமயம்

ஓம் ஸ்ரீ கலங்காத கண்ட விநாயகா துணை

"மாண்புமிகு மாத்தூர்"

முன்னுரை :

ஒன்பது நகரக் கோயில்களுள் ஒன்று மாத்தூர் ஆகும். இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. இலுப்பைக்குடிச் சாலை வழியாக இவ்வூருக்குச் செல்லலாம். தற்போது பேருந்து வசதி, நல்ல தார்ச் சாலை வசதி ஆகியன அமைந்துள்ளன. எனவே மாத்தூருக்கு எளிமையாகச் சென்று வரலாம். அவ்வூரின் மாண்புகளைத் தொகுத்துக் காண்போம்.

I. மாத்தூரின் பழமை

கேரளசிங்க வளநாடு:

இக்கோயிலைச் சேர்ந்தவர்கள், திருமணத்தின் போது எழுதும் "இசைவுப் பிடிமானத்தில்" "கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்"... என்றே முதல் வாக்கியத்தைத் தொடங்கி எழுதுவார்கள்.

இதன் மூலம், மாத்தூரின் மற்றொரு பெயர் **வீர** பாண்டியபுரம் எனத் தெரிய வருகின்றது. பாண்டிய நாட்டை ஆண்ட பிற்காலப் பாண்டிய மன்னன் உருவாக்கிய ஊர் இது என்பதை இக்காரணப் பெயர் உணர்த்துகிறது. இப்பாண்டிய மன்னன் 12 ஆம் நூற்றாண்டில் அரசாட்சி செய்தவன்.

இவ்வூர், பிரம்புகள் அதிகம் விளைந்த பிரம்பூர் நாட்டில் அமைந்திருந்தது. கேரள மன்னரான சேர மன்னருக்குச் சிம்ம சொப்பனமாக - பயம் ஏற்படுத்தும் வீரனாக விளங்கிய வீரபாண்டியனின் வளம்மிக்க நாடு என்பதையே

"கேரள சிங்க வளநாடு" என்ற பெயர் உணர்த்துகிறது. உஞ்சனை நாட்டு 32 1/2 கிராமங்களுள் மாத்தூர் கிராமமும் ஒன்றாகத் திகழ்ந்தது. இக் கோயில் கி.பி.712 ஆம் ஆண்டில் முற்காலப் பாண்டிய மன்னரால் நகரத்தாருக்கு அளிக்கப் பெற்றது.

ஏழு உட்பிரிவுகள் :

மாத்தூர்க் கோயிலில் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. அவையாவன.

1. உறையூருடையார்
2. அரும்பாக்கூருடையார்
3. மணலூருடையார்
4. மண்ணூருடையார்
5. கண்ணூருடையார்
6. கருப்பூருடையார்
7. குளத்தூருடையார்

இவ்வேழு பிரிவினரும் உறையூர்,

அரும்பாக்கம், மணலூர், மண்ணூர், கண்ணூர், கருப்பூர், குளத்தூர் ஆகிய ஊர்களில் முன்பு வாழ்ந்திருக்க வேண்டும். அதனாலேயே இப்பெயர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

திருச்சிக்கு அருகில் உள்ள உறையூரும், திருப்பத்தூருக்கு அருகில் உள்ள கருப்பூரும் மட்டுமே இன்று நாம் காணும் ஊர்களாகும். ஆனால் அங்கு நகரத்தார்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் இல்லை.

அரும்பாக்கம் எனனும் ஊர்ப் பெயர் அரிய கடற்கரை நகரம் எனற பொருளில அமைந்துள்ளது.

இளையாத்தங்குடிக் கோவிலின் ஒரு உட்பிரிவான அரும்பாக்கக் கிளையார் எனும் பொருள் தரும், அரும்பாற்கிளையாரான பட்டண சாமியார், சூரைக்குடிக் கோயிலின் புகழ் வேண்டிய பாக்கமுடையார், ஆகிய பெயர்களிலும் 'பாக்கம்' என்ற கடல் சார்ந்த நகரப் பெயர் வருவதனால், இவை காவிரிப்பூம்பட்டினத்தின் அருகில நகரத்தார் வாழ்ந்திருந்த ஊர்களாக இருக்கலாம் எனக் கருத இடமுள்ளது.

தற்போது பல ஊர்களைச் சேர்ந்த நகரத்தார்கள் ஒன்று கூடி ஒரு ஊரில் பொதுப் படைப்பு படைக்கும்போது "ஆத்தங்குடியார் எல்லோரும் வந்து விட்டனரா?" குருவிக்கொண்டான் பட்டியினர் வந்து விட்டனரா?" என்று வாழ்ந்து வரும் ஊர் அடிப்படையில் வகைப்படுத்தி அழைப்பது போலவே, காவிரிப் பூம்பட்டினத்தின் அருகில் வசித்த ஊர்களின் அடிப்படையில் இவ்வேழு உட்பிரிவுப் பெயர்கள் அமைந்தன எனக் கருத இடம் உள்ளது.

கொள்வினை கொடுப்பினை:

இக்கோயிலின் மொத்தப் புள்ளிகள் 6810. இளையாத்தங்குடிக் கோயிலார் தம் ஏழு பிரிவுகளுக்குள் கொள்வினை கொடுப்பினை முறைகளை வைத்துக் கொண்டுள்ளதை போலவே, மாத்தூர்க் கோயிலிலும் 6 பிரிவுகளுக்குள் திருமணம் செய்து கொள் முறை உள்ளது.

வாழும் ஊர்கள் :

இக்கோயிலைச் சேர்ந்தவர்கள்

1. தேவகோட்டை, 2. காரைக்குடி,
3. வலையபட்டி, 4. பள்ளத்தூர்,
5. நாட்டரசன்கோட்டை, 6. கண்டனூர்,
7. அரிமளம், 8. இராயவரம்,
9. குளிபிறை, 10. இராமச்சந்திரபுரம்,
11. வேந்தன்பட்டி, 12. நற்சாந்துபட்டி,
13. நெற்குப்பை, 14. கோனாபட்டு,
15. புதுவயல், 16. கண்டவராயன்பட்டி
17. கீழச்சிவல்பட்டி, 18. கோட்டையூர்,
19. கானாடுகாத்தான், 20. ஒ. சிறுவயல்,
21. பாகனேரி, 22. கல்லல்,
23. கண்டரமாணிக்கம், 24. ஆத்தங்குடி,
25. பி. அழகாபுரி, 26. சண்முகநாதபுரம்,
27. ஆ. தெக்கூர், 28. கொத்தமங்கலம்,
29. சிறுகூடல்பட்டி, 30. நேமத்தான்பட்டி,
31. வேகுப்பட்டி, 32. விரையாச்சிலை,
33. அலவாக்கோட்டை, 34. கல்லுபட்டி,
35. பணையப்பட்டி, 36. சொக்கநாதபுரம்,

37. குருவிக்கொண்டான்பட்டி, 38. மிதிலைப்பட்டி,
39. ஆவணிப்பட்டி, 40. பலவான்குடி,
41. ஆ. முத்துப்பட்டணம், 42. உலகம்பட்டி,
43. அரண்மனைசிறுவயல், 44. மதகுபட்டி,
45. சொக்கலிங்கம்புதூர், 46. மகிபாலன்பட்டி,
47. கீழப்பூங்குடி, 48, நடராஜபுரம்,
49, கோ.அளகாபுரி, 50. பட்டமங்கலம்,
51. வி. லெட்சுமிபுரம், 52. வெற்றியூர்,
53. கொ. லெட்சுமிபுரம், 54. மானகிரி,
55. கருங்குளம், 56, சோழபுரம்
ஆகிய 56 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்

1. மாத்தூரின் பழமை:

மாத்தூரில் 1500 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட முதுமக்கள் தாழிகள், மண்ணால் செய்யப்பட்ட பானைகள் ஆகியன அகழ்வாய்வின்போது கிடைத்துள்ளன. எனவே இவ்வூர் கி. பி. 4 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என உறுதியாகக் கூறலாம்.

இவ்வூரில் சிவன் கோயில், பெருமாள கோயில், காட்டுக் காளி கோயில் ஆகிய மூன்று

கோயில்கள் மிகப் பழங்காலத்தில் இருந்தமைக்கான சிற்பச் சான்றுகளும், செவி வழிச் செய்திகளும் கிடைத்துள்ளன.

அப் பழைய சிவன் கோயிலில் இருந்த ஆறுமுகப் பெருமானின் சிற்பம் கிடைத்துள்ளது. பெருமாள் கோயிலிலிருந்த திருமகளின் சிற்பம் கிடைத்துள்ளது. அக்கோவிலுக்கு வரதராசப் பெருமாள்கோயில் என முற்காலத்தில் பெயரிடப்பட்டிருந்தமையினால், தற்போது கோயிலின் மேற்குப் பகுதியில் வரதராசப் பெருமாளின் சிற்பத் திருமேனி ஸ்ரீதேவி, பூதேவியருடன் இடம் பெற்றுள்ளது.

காட்டுக் காளியம்மன் கோயிலில் இருந்த அழகு நாச்சியம்மன் சிற்பம் தற்போது புதுப்பிக்கப்பட்ட அம்மன் கோயிலில் தினசரி வழிபடப்பெற்று வருகிறது.

மாத்தூர் பெயர்க் காரணம்:

கொங்கணச் சித்தர் என்னும் முனிவர் தவம்செய்யும் போது, தாமிரத்தைத் தங்கமாக்கும் ரசவாதக் கலையைச் சோதனை செய்து பார்த்தார். முதலில் ஒன்பது உலோகங்களையும், சூதம்,

லிங்கம், அரிதாரம் முதலியவற்றையும் கலந்து இரசவாதம் செய்து, அதில் தாமிரத்தைச் சேர்த்துத் தங்கத்தைத் தயாரித்தார். இச் சோதனையினால அவர் 16 மாற்றுத் தங்கத்தைத் தயாரித்தார. பின்னர் மாத்தூரில் உள்ள கரிமேட்டுப் புன்செய் என்னும் காட்டில், விளாரி என்னும பச்சிலையிலிருந்து சாற்றினைப் பிழிந்து எடுத்து உலோகங்களுடன் கலந்து நெருப்பிலிட்டுக காய்ச்சியதால் 500 மாற்றுத் தங்கத்தை உருவாக்கினார்.

தவமுனிவர், ஆசைகளைத் துறந்து, மக்களுக்கு நிம்மதியான நல்வழியைக் காட்டாமல், பேராசை வயப்பட்டுத் தங்கம் தயாரிக்கத் தொடங்கியதை அறிந்த இறைவன், அவரைத் தடுத்தாட்கொளள நினைத்தார். பிட்சாடனர் உருவில் வந்தார்.

கொங்கணச் சித்தர் தண்ணீர்த் தாகத்தால விக்கியபடி கோயில் வாசலுக்கு வந்து "தண்ணீா! தண்ணீர்!!" என்று கேட்டார்.

பிட்சாடனர் உருவில் வந்த சிவபெருமான், அவருக்குத் தண்ணீரைக் கொடுத்துக் குடிக்கச் செய்துவிட்டு, அவரது பேராசை விளையும்

சோதனைக் கூடத்திலிருந்த தங்கக் குடுவைகளையும், ரசவாத மருந்துகளையும் காலால் தள்ளிவிட்டு மறைந்தார். அப்போதுதான் கொங்கண மகரிஷிக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

'இவ்வளவு தங்கம் இருந்தும், அது ஒரு சாதாரண தண்ணீர் தாகத்தைக் கூடத் தீர்க்க முடியவில்லையே! இது தேவைதானா?' என யோசித்தார். அழியும் தங்கத்தை விட, அழியாத நிம்மதிப் பேற்றினைத் தரும் இறைவனை வழிபடுவதே சாலச் சிறந்தது என முடிவெடுத்து உண்மையான தவயோகியானார்.

500 மாற்று வரை தங்கம் தயாரித்த ஊர் என்பதனால், இதனை மாற்றூர் என்று முன்பு அழைத்தனர். பின்னர் காலப் போக்கில் மாத்தூர் என மருவி வழங்கிவருகிறது. மாத்தூர் என்பதே இவ்வூரின் மிகப்பழைய பெயராகும். இப்புராணக் கதை செவிவழிச் செய்தியாக இன்றும் கூறப்படுகிறது. இச்செய்திக்கு இன்றும் சான்றாக அமைந்திருப்பது இக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் உள்ள பிட்சாடனரின் திரு உருவச் சிற்பம். இச்சிற்பம் மாத்தூர் தலபுராணத்திற்கு ஒரு சரியான சான்றாக அமைந்துள்ளது.

2. கலங்காத கண்ட விநாயகர்

மாத்தூர்க் கோயில் புள்ளிகள், எவ்வூரில் பிள்ளையார் கோயில்- கட்டினாலும், அங்கு நிறுவப்படும் விநாயகருக்குக் கலங்காத கண்ட விநாயகர் என்றே பெயரிடுவது வழக்கம். அதற்கு மூல காரணமாக அமைந்திருப்பது என்ன வென்றால், மாத்தூர்க் கோயிலில் உள்ள கமலாலய ஊருணிக் கரையில் உள்ள விநாயகரின் பெயர் கலங்காத கண்டன் என இருப்பதேயாகும்.

மாத்தூர்க் கோயில் நகரத்தார்களில் பலர், கடல் வணிகம் செய்தவர்கள். நானாதேசிகள் என்றால் பல்வேறு தேசங்களுக்கும் சென்று வரும் வணிகர்கள் என்றே பொருள். இன்று சொந்தத் தொழிலைத் தொடங்கப் பலரும் பயப்படுகின்றனர். அந்த பயமே அவர்களுக்கு முதல் எதிரியாக அமைந்து விடுகிறது. கலங்காத கண்டம் என்றால் பயமறியாத கழுத்து எனப் பொருள். பயம் அதிகமானால், கழுத்தில் உள்ள நரம்புகள் துடிதுடிக்கும். பேச முடியாது. எதுவும் செய்ய முடியாது. அப்படிப் பட்ட பய உணர்ச்சிகளை வென்று சாதனை படைப்பதற்கு உதவுவதனால்,

அவ்விநாயகரைக் கலங்காத கண்ட விநாயகர் என்றனர்.

கலங்காத கண்ட விநாயகர், எவ்வாறெல்லாம் நமக்குத் துணைபுரிவார் என்பதை அக்கோயில் மண்டபத்திலுள்ள சிறு சிற்பங்கள் பெரிதாக உணர்த்துகின்றன.

நின்ற கோல விநாயகர், அமர்ந்த கோல விநாயகர், ஆடும் நிலையிலுள்ள நர்த்தன விநாயகர், மூசிக வாகன விநாயகர், சிம்ம வாகன விநாயகர் என ஐந்து வகை விநாயகர் வடிவங்கள் அங்கு காணப்படுகின்றன.

இரண்டு கை விநாயகர், நான்கு கை விநாயகர், ஆறு கை விநாயகர், எட்டுக் கை விநாயகர், பத்துக் கை விநாயகர், பதினான்கு கை விநாயகர் எனப் பல்வேறு வடிவங்களில் விநாயகர் காட்சி தருகிறார். பக்தர்களைக் காக்கப் பல்வேறு கைகளுடன் "கலங்காதே!" எனக் காப்பாற்ற வருகின்றார் கலங்காத கண்ட விநாயகர். அங்கு ஒரு முக விநாயகரும் உண்டு. ஐந்து முக விநாயகரும் உண்டு! இடம்புரியாகவும் வலம்புரியாகவும் காட்சி தருகின்றார்.

கலங்காத கண்ட விநாயகரின் விமானத்தில் மட்டுமே அதிகமான சுதைச் சிற்பங்கள் உள்ளன. சுவாமி விமானம், அம்மன் விமானத்தைக் காட்டிலும் அதிகமான சுதைச் சிற்பங்கள் கலங்காத கண்ட விநாயகர் விமானத்திலேயே காணப்படுகின்றன.

3. ஐந்நூற்றீஸ்வரர்

நகரத்தார்கள் முன்பு கட்டு மரங்கள் மூலமும், பிறகு கப்பல் மூலமும், கடல் வணிகம் செய்துள்ளனர். கூட்டம் கூட்டமாகக் கடல் பயணம் செய்து வந்தனர். ஒரு கூட்டத்தில் ஐநூறு பேர் சென்றதனால், இவர்களைத் "திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்" எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இந்த ஐந்நூற்றுவர் வணங்கிய தெய்வமே, ஐநூற்றீஸ்வரர் எனப் பெயர் பெற்றது.

இதுபோலச் சிறு கூட்டமாகச் செல்வதைச் சாத்து என்றும், அக் கூட்டத்திற்கான தலைவனைச் சாத்தப்பன் என்றும் கூறுவது பழந்தமிழர் மரபாகும்.

பல்வேறு சாத்துக்கள் சேர்ந்த வணிகக் குழுவிற்கு அங்கம் என்று பெயர். அக்குழுவிற்கான

தலைவனை அங்கப்பன் என்று கூறுவது நம் மரபாகும்.

இம் மரபுப் பெயர்கள் இன்றளவும் நிலைத்திருப்பதன் மூலம் நமது பழைய கால வணிக வரலாற்றுச் செய்தியும் நமது பண்பாட்டுச் செய்தியும் தெரிய வருகின்றன.

4. பெரியநாயகி அம்மன்

நாயகி என்றால் தலைவி என்று பொருள். உயிர்களுக்கெல்லாம் தலைவியை நாயகி என்பது முறைதான். ஆனால் இங்கு பெரியநாயகி எனக் குறிப்பிடப்படுவது ஏன்? என்று சிந்திக்க வேண்டும்.

அம்மன் பொழிகின்ற கருணை மழையினையும் அருட் பொழிவினையும் கண்ட மெய்ஞானிகள் அருள் வெளிப்பாட்டின் பெருமையை உணர்த்த இப்பெயரைச் சூட்டியிருக்கலாம். அம்மனின் அருள் பெரிதாக வெளிப்படுவதை, அம்மனின் ஒசிந்த பார்வை வெளிப்படுத்துகிறது. பிற கோயில்களில் உள்ள அம்மன் சிற்பத்தையும் இங்குள்ள அம்மன்

சிற்பத்தையும் ஒப்பு நோக்கினால் இத்தன்மை தெரியவரும். பிற அம்மன் சிற்பங்களில் தலைப் பகுதி நேராக நிமிர்ந்த தோற்றத்தில் அமைந்திருக்கும். ஆனால் பெரியநாயகி அம்மனின் திருமுகம், நாடி வந்தோரின் விருப்பத்தை உடனே நிறைவேற்றுவது போல - சற்றே முகம் சாய்த்து "என்ன? நலம் தானே? என்ன வேண்டும்?" என்று ஒரு தாய் மகளைப் பார்த்துக் கேட்பது போல அமைந்திருக்கிறது. இந்தப் பெரிய அருள் வெளிப்பாட்டினாலேயே பெரியநாயகி என்ற பெயரைச் சூட்டியிருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தாமரை மலர்ப் பீடத்தின் மீது இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் அம்மன் காட்சி தருகின்றார். வலது கையில் நீலோற் பல மலர் காணப்படுகிறது. இடது கை தாழ்கையாக லோல முத்திரையுடன் காணப்படுகிறது. கரண்டமகுடம் தலையை அலங்கரிக்கிறது. மகர குண்டலங்கள் காதுகளிலும், மங்கலத் தாலி, மணிமாலை ஆகியன கழுத்திலும் அணிசெய்கின்றன. கை வளையல்கள், பாதசரம் ஆகியன அழுக்கு அழகு செய்கின்றன.

5. உயர்வு மிகு நந்தி

மாத்தூர்க் கோயிலின் தனிச் சிறப்புக்களுள் ஒன்றாகத் திகழ்வது நந்தியின் சிம்மபீடமாகும். நான்கு சிங்கங்கள் நான்கு திசைகளை நோக்கி அமர்ந்துள்ளன. அவற்றின் தலைமீது ஒரு கப்பீடம் அமைந்துள்ளது. அதன்மீது நந்தியின் சிற்பம் வடிவமைக்கப் பட்டுள்ளது. நந்திக்குச் சிம்மபீடம் ஏன் கொடுக்கப்பட்டது என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''சிவஞான போதம்'' என்னும் நூல் தெய்வ தத்துவத்தையும் வழிபாட்டுத் தத்துவத்தையும் மிகச் சுருக்கமாகவும் மிக எளிமையாகவும் கூறுகிறது.

பதி, பசு, பாசம் என்ற மூன்றினுள் தத்துவங்களை அடக்கி விடுகிறது. பதி என்பவன் இறைவன். பசு என்பது உயிர் அல்லது ஆன்மா, பாசம் என்பது அவை இரண்டுக்குமிடையே உள்ள இடைவெளி. பதியாகிய இறைவனை நோக்கிப் பசுவாகிய உயிர் சென்றடைய முயல்கிறது. ஆனால் உலகப் பாசம் உயிரை மயக்குகிறது. அந்த இடைவெளி, - உலகமாயை குறையக் குறைய உயிர் இறைவனை நெருங்கலாம் என்பார்கள்.

இதை மேலும் நன்றாக விளக்குவதே தட்சிணா மூர்த்தியின் சின் முத்திரையாகும். ஆட்காட்டி விரல் என்னும் உயிர், ஆணவம், கருமம், மாயை என்னும் மூன்று விரல்களுடன் சேர்ந்தே இருக்கும் இயல்புடையது. கட்டை விரல் என்னும் ஆண்டவனைத் தேடி ஆட்காட்டி விரல் வந்தால், தானாகவே பிற மூன்று விரல்களும் விலகிப் போவது போல மூன்று மலங்களும் உயிரைவிட்டு விலகிவிடும். ஆண்டவனின் திருப்பாதத்தில் சரணாகதியடைய வேண்டும். என்பதே சின் முத்திரை கூறும் தத்துவம்.

அதையே நந்தியின் சிற்பம் நன்கு விளக்குகிறது. நந்தி என்பது உயிரின் - ஆன்மாவின் குறியீடு - உருவகம். ஆன்மாவை உயர்வுடையதாக்குங்கள் என்பதை உணர்த்தவே நந்திக்குச் சிம்மபீடம் தந்துள்ளனர்.

6. இராஜகோபுரத் தோரண வாயில்

இராஜகோபுர நுழை வாயிலில் உள்ள இரு நிலைக் கால்களில் இரண்டு கொடிப் பெண்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கும் மேலாகப் பல்வேறு முனிவர்கள் பல்வேறு யோக நிலைகளில் அமர்ந்து தவம் செய்யும் கோலத்தில் அமர்ந்த புடைச் சிற்பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

கொங்கணச் சித்தர் முதலான தவயோகிகள் வாழ்ந்த பகுதி என்பதனால், இக்கோயில் நிலைக்கால்களில் 27 தவயோகிகளின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. ராஜகோபுரம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டப் பெற்றதால் அக்கால முனிவர்களான இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமண மகரிஷி ஆகியோரின் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளது புதுமைக்கான சான்றுகளாகும்.

"பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதலன்றிப், பிறவார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்துள்!" என அறிவிப்புப் பலகையை

வைக்காமல், "இங்கு தவம் செய்க!" வழிபாடு செய்க! என்பதை இம் முனிவர்களின் சிற்பங்களால் குறிப்பாக உணர்த்தியுள்ளனர்.

7. தலவிருட்சம் - மகிழமரம்

இக்கோயிலின் தல விருட்சம் மகிழ மரமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முந்திய இம்மரம் இன்றும் செழித்து வளர்ந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

நெருப்பு வழிபாடு, மரவழிபாடு நாகவழிபாடு ஆகியன மனிதனின் பழமையான வழிபாடுகளாகும். எனவே மரவுவழிபாடு உள்ள கோயில்கள், மிகப் பழைய கோயில்கள் எனத் தெரிய வருகிறது.

இம் மகிழ மரம், வழிபடுவோருக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இம்மரம் பூக்கும் என்றும் காய்ப்பதில்லை, மணப்பதுமில்லை!

8. ஆனந்த முனீஸ்வரர்

முனிவர்கள் பலரும் போற்றி வணங்கிய ஈஸ்வரனை முனீஸ்வரன் என்பர். அதிகமான கோபத்துடன் உக்கிர வடிவம் கொண்ட ஈஸ்வரன் என்ற பொருளிலும் முனீஸ்வரன் என்பார்கள். இம் முனீஸ்வரருக்கான பீடத்தை மட்டும் கோயிலின் வெளிப் பிரகாரத்தில் அமைப்பது மரபாக உள்ளது. ஆனால் உள் பிரகாரத்திலேயே தல விருட்சத்தின் கீழ் முனீஸ்வரர் மாத்தூரில் வழிபடப் பெறுகின்றார்.

இம் முனீஸ்வரரைப் பற்றிய செவிவழிச் செய்தி சுவையாக அமைந்துள்ளது. சாக்கோட்டையிலுள்ள கோட்டை முனி, இவ்வூர எல்லை வரை வந்தபோது, இவ்வூரில் அன்றிருந்த அத்தியானப்பட்டர் திரு. சின்னச்சாமி ஐயர் என்பவர், தன்னுடைய மந்திர சக்தியினால் இவ்வூரிலேயே தங்கியிருந்து அருள்புரியச் செய்தார் எனக் கூறுகின்றனர்.

இம் முனீஸ்வரர் வந்தது முதல் இப்பகுதியில் நன்மைகள் பெருகியதால் இவரை ஆனந்த முனீஸ்வரர் என்று போற்றுகின்றனர்.

ஒவ்வொரு முறை திருப்பணி செய்யும போதும், முதலில் முனீஸ்வரருக்குச் சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது.

9. சண்டிகேசுவரர் கோயில்

மாத்தூரில் உள்ள தனித்தன்மை மிக்க கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குவது, அங்குள்ள சண்டிகேசுவரர் கோயில். அடிமுதல் உச்சிக் கலசம் வரை வெள்ளைக் கல்லால் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டது. இந்தக் கோயிலின் கலசத்திற்கு மேலே உள்ள விதானப் பகுதியைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அது ஒரு குடையின் வடிவில் குடையப்பட்டு, அதனுடைய நடுப்பகுதியில் ஒரு சிறிய துளையினையும் எற்படுத்தியுள்ளனர். இந்தத் துளை வழியாக மழைநீர் இறங்கி வந்து கலசத்தையும் விமானத்தையும் சுத்தப்படுத்துவதற்காக இவ்வாறு அமைத்துள்ளனர். நகரத்தார் காலக் கட்டடக் கலையின் தனிச் சிறப்பிற்கு இக்கோயில் ஒரு சான்றாக அமைந்துள்ளது.

10. கட்டடக் கலைச் சிறப்புகள்

1500 வருடங்களுக்கு முன் மாத்தூரில் இருந்த சிவன் கோயில், பெருமாள் கோயில், காட்டுக் காளியம்மன் கோயில் ஆகிய மூன்றும் அளவினால் சிறியதாகவும், செம்புராங் கல்லால் வடிவமைக்கப்பட்டதாகவும் இருந்தன. அவற்றை அளவில் பெரியதாகவும், வெள்ளைக் கல்லாலும் மாற்றியமைத்துக் காலகாலத்திற்கும் நிலைத்திருக்கும் படியாக முழுமையான திருப்பணிகளைச் செய்தார்கள் நகரத்தார்கள்.

தற்கால விஞ்ஞானிகள் வலியுறுத்தும் காற்றோட்டம் மிக்க வெளிச்சமும் விசாலமும் கூடிய கட்டடங்களை அன்றே அமைத்த பெருமை நகரத்தார்களுக்கு உண்டு. மாத்தூர்க் கோயிலின் கருவறை, மகாமண்டபம், முகமண்டபம், திருச்சுற்று மாளிகை, விழா மண்டபம், நகரவிடுதி ஆகியவற்றைப் பார்த்தால் நகரத்தார்களின் கட்டடக் கலைச் சிறப்பு நன்கு தெரியவரும். நல்ல காற்றோட்டமும், அதிக வெளிச்சமும் கிடைக்கத்தக்க வகையில் உயரமான சுவர்களை எழுப்பி, அதில் பெரிய அளவு ஜன்னல்களை அமைத்துள்ள திறம், பாராட்டத் தக்கது.

முதல் திருப்பணி:

நகரத்தார்கள் இக்கோயிலை முறையாகப் பாண்டிய மன்னனிடமிருந்து பெற்று முதல் திருப்பணியைத் தொடங்கியுள்ளனர். அப்போது கலங்காத கண்ட விநாயகர் கோயில், சிவன் கோயில், அம்மன் கோயில் ஆகிய மூன்றும் வெள்ளைக் கல்லால் கட்டப்பட்டன. இத்திருப்பணி எந்த ஆண்டு தொடங்கி, எந்த ஆண்டு நிறைவு பெற்றது என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகளோ, கணக்கு ஏட்டுச் சான்றுகளோ கிடைக்கவில்லை. ஆனால் இம்மூன்று கோயில்களின் கட்டிட அமைப்பு, சிற்பக் கலை அமைப்பு ஆகியனவற்றை ஆராய்ந்து பார்த்தால் சற்றேரக் குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பெற்றிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

இரண்டாவது திருப்பணி:

1931 ஆம் ஆண்டு, வாகனக் கொட்டகைகளை முதலில் அமைத்து இரண்டாவது திருப்பணியைத் தொடங்கியுள்ளனர்.

இத்திருப்பணிக்காக நகரத்தார்கள் எடுத்துள்ள முயற்சி வியந்து பாராட்டத் தக்கதாக அமைந்துள்ளது.

"உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" என்பார் திருவள்ளுவர். அதே போல உயர்ந்தவற்றை மட்டுமே திட்டமிட்டுச் செயலாக்கியுள்ளனர்.

இத்திருப்பணிக்கான தலைமைச் சிற்பிகளாக, அக்காலத்தில் மிகச் சிறப்புற்றிருந்த மூன்று சிற்பிகளை ஏற்பாடு செய்துள்ளனர். தேவகோட்டை வயி. மகிஷவன ஸ்தபதி, ம.செல்லக்கண்ணு ஸ்தபதி, ம.வைத்தியநாத ஸ்தபதி ஆகிய முப்பெரும் ஸ்தபதிகளின் கீழ் 500 சிற்பிகள் தினசரி பணிபுரிந்துள்ளனர். இவர்கள் உலகப் புகழ் பெற்ற எழுவன்கோட்டை ஸ்தபதிகளின் குடும்பத்தினர் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்திருப்பணியில் 6 மீட்டர் நீளமுள்ள கர்ணக்கால் தூண்கள் இரண்டு, முக மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளன. இதில் 3 திரட்டுத் தூண்கள் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவை பதினாறு கோண வடிவுடையதாகச்

செதுக்கப்பட்டிருப்பது வியப்புக்குரிய கலைப் படைப்பாகும். அத்தூணின் உறுப்புக்களான தாமரைக் கட்டமைப்பு, கலசம், தாடி, குடம், இதழ், பூ முனை ஆகியன மிக நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

அடுத்து வியப்புக்குரியது மகாமண்டப வாயில் படிகள்! மிக நீளமான படிகளும், அதில் உள்ள இரண்டு யானைச் சிற்பங்களும், துவார பாலகர் பீடங்களும் ஆகிய அத்தனை அமைப்புகளும் ஒரே கல்லால் ஆனது. இது ஐந்தரை மீட்டர் நீளமும் ஒரு மீட்டர் அகலமும் உடையது. இதற்கு எவ்வளவு பெரிய கற்களை, எங்கிருந்து எப்படிக் கொண்டு வந்தனர். என்பதைக் கேள்விப்பட்டால் வியப்பு அதிகரிக்கும்; பெருமூச்சே தோன்றும்.

இத் திருப்பணிக்கான பெருங்கற்களைத் திருவண்ணாமலையிலிருந்து புகைவண்டி மூலம் தஞ்சாவூர் வரை கொண்டு வர ஏற்பாடு செய்துள்ளனர். தஞ்சாவூரிலிருந்து அக்கற்களை மிகப் பெரிய - அகலமான - உறுதியான சகடைகள் போன்ற வண்டிகளில் ஏற்றிக் கொண்டு வந்துள்ளனர். அப்பெருங்கல் வண்டியை ஆறு

ஜோடி மாடுகள் இழுத்து வரும். பன்னிரண்டு காளை மாடுகள் இழுத்த போதும் பாரம் அதிக மென்பதால் அவ்வண்டி மிகக் குறைந்த வேகத்தில் மெதுவாக வந்தமையால் அவற்றை "ஆமை வண்டிகள்" என்று குறிப்பிடுவார்கள்! திருமெய்யத்திலிருந்தும் பெரும் கற்கள் ஆமை வண்டி மூலம் கொண்டுவரப் பட்டுள்ளன.

இரண்டாவது திருப்பணி 1934 ஆம் ஆண்டு தொடங்கி 1949 இல் நிறைவு பெற்றுள்ளது. அப்போது பதினாறு லெட்ச ரூபாய் செலவில் இத்திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

இத்திருப்பணியில் முகமண்டபம், திருச்சுற்று மாளிகை, விநாயகர் கோயில். ஆறுமுகம் கோயில், திருமகள் கோயில், பள்ளி அறை, வைரவர் கோயில், சண்டேசுவரர் கோயில், இராஜ கோபுரம், விழா மண்டபம் ஆகிய அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டன.

1949 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி திருக்குட நன்னீராட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மூன்றாவது திருப்பணி:

இரண்டாவது திருப்பணியை முழுமையாகவும் சிறப்பாகவும் செய்தமையினால் புதிய கட்டிடம் ஏதும் கட்டாமலேயே, சுதைச் சிற்பங்களை ஒழுங்கு செய்து, வண்ணம் பூசி 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியன்று திருக்குட நன்னீராட்டு விழாவினை நடத்தியுள்ளனர்.

நான்காவது திருப்பணி:

தம்மைச் சார்ந்தவர்களுக்கெல்லாம், இயன்ற அளவு உதவுவது நகரத்தார்களின் இயல்பு. எனவே மாத்தூரில் உள்ள கிராம தெய்வங்களான ஸ்ரீ அழகிய நாச்சி அம்மனுக்கும், ஸ்ரீ அழகிய ஐந்நூற்று ஐயனாருக்கும் 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் தேதி திருக்குட நன்னீராட்டு விழாவினை நடத்தியுள்ளனர்.

1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் நாள் ஐந்நூற்றீஸ்வரர் பெரியநாயகி அம்மன் கோயிலில் திருக்குட நன்னீராட்டு விழாவை நடத்தியுள்ளனர்.

II. நகரத்தார் கலைப் பாணி

"மன்னர் பின்னோர்" எனப் புகழப்பட்ட நகரத்தார்கள், முற்கால மன்னர்களான பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் போலவே கோயில்கலைகளை வளர்த்துப் பெரும். சாதனை புரிந்துள்ளனர். சோழர்களின் தனித்தன்மைகள் எவ்வாறு சோழர் கலைப்பாணி எனப் புகழப்படுகிறதோ, அதே போல நகரத்தார் கோயில் அமைப்பில் கையாண்ட தனிச்சிறப்புக்கள் நகரத்தார் கலைப்பாணி எனப் போற்றப்படுகிறது.

மாத்தூர்க் கோயிலின் கட்டடக் கலையும் சிற்பக் கலையும் நகரத்தார் கலைப் பாணிக்குச் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன.

கருவறையின் பீடமாக அமைந்துள்ள அதிட்டானத்தில் காணப்படும் குமுதம், கண்டம், கபோதம், வரிமானம் ஆகிய உறுப்புகள் மிகச் சிறந்த வேலைப்பாடு மிக்கவை.

மகாமண்டப வாயில் படிகளும், அதில் அமைக்கப்பட்டுள்ள இரு யானைச் சிற்பங்களும்,

துவார பாலர்களுக்கான பீடங்களும் ஆறு மீட்டர் நீளத்தில் அமைந்த ஒரே கல்லினால் வடிவமைக்கப் பட்டுள்ள சிறப்பினை நேரில் கண்டு களிக்க வேண்டும்.

முக மண்டபத்தில் உள்ள தாய்த் தூண்கள், பிள்ளைத் தூண்களில் செதுக்கப் பெற்றுள்ள சிங்கங்களின் சிற்பங்கள் மிக அழகானவை.

முக மண்டபத்தின் முகப்பில் உள்ள கர்ணக்கால் தூண்கள் இரண்டையும் வியந்த வண்ணம் அனைவரும் பார்த்துச் செல்கின்றனர். நீண்டு உயர்ந்து நிற்கும் தாய்த் தூண்களுடன் மூன்று திரட்டுத் தூண்கள் ஒரே கல்லால் உருவாக்கப்பட்டிருக்கும் அழகை நேரில் சென்று பார்த்து மகிழ வேண்டும்.

முக மண்டப விதானத்தில் பன்னிரண்டு ராசிகளும் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. சங்க காலம் முதல் தொடர்ந்து வரும் தெய்வீக மரபினை இங்கு பொன்போலப் போற்றியுள்ளனர்.

12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆதிலிங்கமும், சிறிய நந்தியும் திருச்சுற்று மாளிகையில் உள்ளன. இவை இரண்டும்

மாத்தூரில் புதை பொருளாக இருந்து கண்டெடுக்கப்பட்ட பழைய சிற்பங்கள் என்பதால் அவற்றைப் பேணிப்பாதுகாத்து வழிபட்டு வருகின்றனர். ஆதிலிங்கம் கன்னி மூலை கணபதிக்குப் பக்கத்தில் உள்ளது. சிறிய நந்தி, விசுவநாதர் விசாலாட்சி சன்னதியில் உள்ளது.

மாத்தூரில் இருந்த பழைய பெருமாள் கோயில் நினைவாகத் திருச்சுற்று மாளிகையின் மேற்குப் பகுதியில் சங்கு சக்கரம் ஏந்திய வரதராசப் பெருமாளின் சிற்பம் நிலமகள் திருமகளுடன் வழிபடப்பட்டு வருகிறது. சிவன் கோயிலில் ஒரு பெருமாள் கோயிலை அமைத்துத் தங்கள் சமயப் பொறையினை நகரத்தார்கள் நிரூபித்துள்ளனர்.

பிற நகரக் கோயில்களில் காணப்பெறாத பிட்சாடனரின் திருஉருவம் மேற்குத் திசையில் அமைக்கப்பட்டுள்ளது. நெற்றிக் கண்ணுடன் அமைந்த பிட்சாடனரின் தோற்றமும், அன்னப் பாத்திரத்தைத் தலையில் தாங்கி நிற்கும் சிவகணத்தின் உருவமும் அழகாக அமைந்துள்ளன.

பைரவர் சிற்பத்தின் அழகும் பலரைக் கவர்ந்துள்ளது. அவரது இடது கையில் தலைதூக்கி ஆடுகின்ற நாகப்பாம்பு ஒன்று

காணப்படுகிறது. பைரவரின் முழங்கை வரை அது சுற்றிப் படர்ந்துள்ள காட்சி கண்டு இன்புறத் தக்கது. கையைச் சுற்றிய பாம்புபோல, வரும் துன்பங்களிலிருந்து பைரவர் நம்மைக் காப்பார என்பதைக் குறியீடாக இச்சிற்பம் விளக்குகிறது.

இராசகோபுரத்தின் முன்புறம் அமைந்துள்ள விழா மண்டபம், மிக விரிவாகவும், அழகாகவும அமைந்துள்ளது. இதில் 42 தூண்கள் இடம பெற்றுள்ளன. 54 வெள்ளைக் கற்களை வரிசையாக அமைத்து 21 1/2 மீட்டர் நீளமும் 17 மீட்டர் அகலமும் உள்ள மண்டபத்தை அமைத்துள்ளனர்.

கலங்காத கண்ட விநாயகர் கோயிலில் காணப்படும் தூண் சிற்பங்களும், விமானத்தில் காணப்படும் சுதைச் சிற்பங்களும் மிக வியந்து பாராட்டத் தக்கவை. இராமாயண, பெரியபுராணக் காட்சிகள் சிலைவடிக்கப்பட்டுள்ளன. விநாயகரின் பல்வேறு உருவங்கள், சைவ வைணவ அடியார்கள், நாட்டுப்புறத் தெய்வங்கள், முனிவர்கள், பறவைகள், மிருகங்கள் ஆகிய பல்வேறு சிற்பங்கள் அழகாகச செதுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மூன்றாவது தூணின் நடுப்பகுதியில் ஒரு நூதனமான சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. யானை, காளை ஆகிய இரண்டு உடல்களுக்கும் ஒரு தலை மட்டுமே நடுவில் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு புறமிருந்து பார்த்தால் அத் தலை யானைத் தலையாகவும், மறுபுறமிருந்து பார்த்தால், அது காளையின் தலையாகவும் தெரியும் வண்ணம் புதுமையாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

மனிதத் தலையும், சிங்கத்தின் உடலும் கொண்ட மனித மிருகத்தின் சிலை ஒன்பதாவது தூணில் புதுமையாகச் செதுக்கப்பட்டுள்ளது.

தெட்சிணா மூர்த்தி மண்டபக் கொடுங்கைச் சிற்பங்கள் மரவேலைத் தச்சர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட கல்வேலை அற்புதங்களாகும். இம் மண்டபத்தை இரண்டு சிங்கங்கள் தாங்குவது போல அமைக்கப் பட்டுள்ளது. சீறிப் பாய்வது போன்ற இச் சிங்கங்களின் திறந்த வாய்க்குள் பெரிய கல் குண்டுகளைச் சிற்பிகள் வழுவழுவென்று செதுக்கியுள்ள திறம் வியந்து பாராட்டத் தக்கது. இதில் மற்றொரு அதிசயம் என்ன வென்றால், 6 செ.மீ. அளவில் திறந்துள்ள

சிங்கத்தின் வாயினுள் உருண்டு வரும் கல்குண்டின் சுற்றளவோ 30 செ.மீ.

இக்கோயிலின் கருவறைக் கபோதகத்தின் மீதும், கூடுகளின் மீதும் காணப்படும் சிற்பங்கள் மிக நுணுக்கமான சிற்ப வேலைகள் கொண்டவை. அவற்றுள் கூத்தாடும் விநாயகர், யானைத் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு நடனமாடும் கஜசம்ஹாரமூர்த்தி, கண்ணப்பர், ஒரு காலுடன் தோன்றும் ஏகபாதமூர்த்தி, இரணிய சம்ஹாரமூர்த்தி, காளியன் என்னும் பாம்பு மீது நடனமாடும் கண்ணன், கஜேந்திர மோட்சம், உலகளந்த பெருமாள், எட்டுக் கையுடைய நிசும்பசூதனி முதலிய சிற்பங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

12. அழகு நாச்சியம்மன் கோயில்

மாத்தூர் கிராம மக்கள் சிறுதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது, அவ்வூர்ப் பெண் தெய்வம் ஒன்றுக்குக் கண்டனூர்ச் சாலையில், ஊருக்கு வடதிசையில் 1 கி.மீ. தூரத்தில் ஒரு கோயிலை அமைத்துள்ளனர்.

காட்டு அம்மன் என்ற பெயரில் முற்காலத்தில் வழிபடப் பெற்ற இத்தெய்வம், அதன் அழகிய தோற்றத்தால் அழகு நாச்சியம்மன் எனப் பிற்காலத்தில் போற்றப்படுகிறது. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச் சிறுதெய்வக் கோயிலையும் பாண்டிய மன்னர்கள் நகரத்தாரைப் பராமரிக்க வேண்டிக் கொடுத்துள்ளனர். இரு பெண் பூதங்களும், ஒரு வேதாளமும் இக்கோயில் சிற்பங்களுள் குறிப்பிடத் தக்கவை. 4.7.1988 அன்று இக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றுள்ளது.

13. தினசரி வழிபாடும் திருவிழாக்களும்

மாத்தூர்க் கோயிலில் தினசரி ஐந்து கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இவை காரண ஆகம முறைப்படி நடைபெறுகின்றன,

அவையாவன :

1. விடிகாலை வழிபாடு (திருவனந்தல்)
   காலை 6 - 6.30 மணி
2. காலை வழிபாடு (கால சந்தி)
   காலை 8.30 9.30 மணி
3. நண்பகல் வழிபாடு (உச்சிக்காலம்)
   முற்பகல் 11 12 மணி
4. மாலை வழிபாடு (சாயரட்சை)
   மாலை 5 6.30 மணி
5. இரவு வழிபாடு (அர்த்த ஜாமம்)
   இரவு 8 - 9 மணி

இறைவனையே தங்கள் அரசனாகக் கொண்டு அதனாலேயே புள்ளிவரி செலுத்திவரும் நகரத்தார்கள் அரசனுக்குச செய்த

மரியாதைகளை ஆண்டவனுக்குச் செய்து வருகின்றனர். சோடச உபசாரம் என்னும் பதினாறு வித உபசாரஙகள் இங்கு நடை முறையில் உள்ளது. அரசனுக்கு மரியாதை தருவதற்குப் பயன்படுத்திய குடை, கொடி, விசிறி, சுருட்டி, அபதாகிரி, சாமரம், அருக்கிய பாத்திரம் முதலியனவற்றை ஆண்டவனுக்குரிய மரியாதைப் பொருட்களாக்கி, அவற்றைக் கொண்டே இறைவனை வரவேற்று, உணவுப் பொருட்களைப் படைத்துப் பிறகு தீப ஆராதனை செய்வது வழக்கமாகும்.

வழிபாட்டில் பயன்படுத்தப்படும் அபிஷேகப் பொருட்கள் இறைவனின் படைத்தல் தொழிலையும், உணவுப் பொருட்கள் காத்தல் தொழிலையும், பலி கொடுப்பது அழித்தல் தொழிலையும், தீபம் மறைத்தல் தொழிலையும், வேள்வி (ஹோமம்) அருளல் தொழிலையும் உணர்த்துகின்றன, இவ்வாறு வழிபாட்டில் இடம்பெறும் ஒவ்வொரு சடங்கும் இறைவனது தத்துவக் குணங்களை உணர்த்துவதாகவே அமைந்துள்ளது.

மாத்தூரில் முன்பு திருவாதிரைத் திருவிழா நடைபெற்று வந்தது. மார்கழித திருவாதிரை நாளில் சிவகாமி அம்மனும் நடராஜப் பெருமானும ஊர்வலமாகத் திருவீதி உலாவிற்கு எழுந்தருளுவார்கள். அன்று சிவகாமி அம்மனின் ஊடலைத் தீர்ப்பதற்காக நடராஜப் பெருமான் மாணிக்க வாசகரைத் தூதாக அனுப்புவார். அப்போது ஊடலை விடுவதற்காகக் கோயில் சொத்துக்களையெல்லாம் தானமாகத் தருவதாக மாணிக்கவாசகர் அம்மனிடம் கூறுவார். அப்போது கோயில் சொத்துக்களையெல்லாம் பட்டியலிட்டு வாசிப்பார். இதன் மூலம் கோயில் சொத்துக்கள் என்னென்ன எங்கெங்கு உள்ளன என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை நாளில கோயில் முழுவதும் தீபங்கள் ஏற்றப்படும். முருகனுக்குச் சிறப்பு அபிடேக ஆராதனைகள் செய்யப்படும். மயில் வாகனத்தில் முருகன் எழுந்தருளித் திருவீதி உலா வருவார். அப்போது சொக்கப்பனை கொளுத்தப்படும்.

மாசி மாதம் சிவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. நான்கு கால பூஜைகள் மாத்தூர்

மாத்தூர்க் கோயிலில் பிரதோஷ விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நவராத்திரி விழாவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

14. ஆயுளைக்கூட்டும் சிறப்புவழிபாடு

இறை வழிபாட்டின் மூலம் எல்லா வகையான இன்பப் பேறுகளையும் பெறலாம். எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம். அவ்வாறு எண்ணியவர்கள் உறுதிமிக்க திண்ணியர்களாக உருவாவதற்கு இறைவழிபாடு பெரிதும் உதவும். அதற்கான சிறப்பு வழிபாடே ஆயுஷ்ய ஹோமம் எனப்படும் ஆயுள் நீட்டிப்புச் சிறப்பு வழிபாடாகும்.

மாபெரும் முனிவர்கள் தொடர்ந்து தவம்செய்த பெரிய தவச்சாலைதான் மாத்தூர். இங்கு ஹோமம் செய்து வழிபட்டால் கலங்காத நல்வாழ்வு கிடைக்கும். திசை ஆயிரத்து ஐந்நூற்றுவருக்குக் கடல் பயணத்தில் உதவிய ஐந்நூற்றீசுவரர் இன்றும் நமக்கு

மன உறுதியையும், உழைப்புத் திறனையும் தந்தருள்வார் பெரிய நாயகி அம்மன் பெருங்கருணை புரிவார். ஆனந்த முனீஸ்வரர் தடைகளை உடைப்பார். பிட்சாடனர் நமக்கு என்றும் உணவளித்துக் காப்பார். துயரங்களை பைரவர் துடைப்பார். இந்த வகையில் நமக்குப் பேறு அனைத்தும் கிடைக்கச் சிறப்பு வழிபாடு (ஆயுள் ஹோமம்) செய்யச் சிறப்பு ஏற்பாட்டினைத் தற்போது செய்துள்ளனர். அதற்கான வைதீகச் செலவுகளுக்கு மொத்தச் செலவு ரூ 3500 மட்டுமே! இவ்வாறு ஆயுள் ஹோமம் செய்துகொள்ள விரும்புபவர்கள் நகரவிடுதி மேலாளரைத் தொடர்பு கொண்டால் அவர் ஆவன செய்து உதவுவார்.

59ஆம் ஆண்டு நிறைவு விழா, 60ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா, 73ஆம் ஆண்டு நிறைவு பீமரத சாந்தி விழா, 80ஆம் ஆண்டு நிறைவு சதாபிஷேக விழா, 100ஆம் ஆண்டு நிறைவு மகாபிஷேக விழா ஆகியவற்றை நமது கோயிலிலேயே அருமையாகச் செய்து கொள்ளலாம்.

தொகுப்புரை

மாண்புகள் பல பெற்ற மாத்தூர் 1500 ஆண்டு கால வரலாற்றினை உடைய தொல்பழங்காலத்து முதூராகும்.

கொங்கண மகாமுனிவர் மாற்றுப் பார்த்து, 500 மாற்றுவரை தங்கத்தை ரசவாதத்தால் தயாரித்தமையால் மாற்றூர் எனப் பெயர் பெற்றது. பிற்காலத்தில் இது மாத்தூர் எனவாயிற்று. இங்கு பழமையான மூன்று கோயில்கள் இருந்தன. அவை தற்போது இரண்டு கோயில்களாக நகரத்தார்களால். கட்டப் பெற்று முறையான வழிபாடு நடைபெற்று வருகிறது.

ஏழு உட்பிரிவுகளைக் கொண்ட மாத்தூர்க் கோயிலில் 6810 புள்ளிகள் உள்ளனர். இவர்கள் 56 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மாத்தூர்க்கோயில் நகரத்தார்கள் முன்பு கடல் வணிகம் செய்தவர்கள். அவர்கள் 500 பேர் சேர்ந்து "திசை ஆயிரத்து ஐநூற்றுவர்" என்ற பெயரில் பல நாடுகளுக்கும் சென்று கடல் வணிகம் செய்துள்ளனர். ஐந்நூற்றுவருக்கு இறைவன் என்பதாலேயே இறைவனுக்கு ஐந்நூற்றீஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது.

கடலில் இரவு பகலாகப் பயணம் செய்தாலும் பயத்தால் கண்டம் (கழுத்து) கலங்காமல் இருக்க், அவர்கள் கலங்காத கண்ட விநாயகரை வழிபட்டுள்ளனர். நெஞ்சில் உரத்தையும் நேர்மைத் திறத்தையும் தரும் தெய்வம் கலங்காத கண்ட விநாயகர்.

கலங்காத கண்ட விநாயகர் கோயில் தூண்களிலும் விமானத்திலும் அதிகமான சிற்பங்கள் காணப்படுகின்றன.

பெருங் கருணையோடு அருள்புரியும் தெய்வம், பெரியநாயகி அம்மன். வாடிவரும் பக்தர் துயர்தீர்க்கும் அம்மனின் முகம் சற்றே சாய்ந்திருப்பது இதற்குச் சான்றாகும்.

நான்கு சிங்கங்களின் மூலம் சிம்ம பீடம் அமைத்து அதன்மேல் நந்தியை இடம்பெறச் செய்துள்ள அருமை மாத்தூரில் மட்டுமே காணத்தக்கது. ஆன்மாவை உயிரை உயர்வாக்கவேண்டும் என்ற தத்துவ விளக்கமாக இது அமைந்துள்ளது.

இராஜகோபுரத் தோரண வாயிலில் உள்ள 27 முனிவர்களின் தவக்கோலம், மாத்தூர் ஒரு தவச்சாலை என்பதை நிரூபிக்கிறது.

தலவிருட்சமான மகிழ மரத்தில் ஆனந்தமாக முனீஸ்வரர் இரண்டறக் கலந்துள்ளார். இதனாலேயே அம் மரம் வளர்வதுமில்லை, வளர்ச்சி குன்றுவதுமில்லை. ஆனந்த

முனீஸ்வரரை வணங்குவோர் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக மாறுவது கண்கூடான உண்மை.

சண்டிகேசுவரர் கோயில், மழை நீரால் தூய்மை பெறுவதற்கு ஏற்பப் புதுமையாக வடிவமைக்கப் பெற்றுள்ளது.

மாத்தூர்க் கோயிலின் கட்டடக் கலையும் சிற்பக் கலையும் நகரத்தார் கலைப் பாணிக்குச் சிறந்த சான்றுகளாகும்.

திருவண்ணாமலையிலிருந்து பெரிய அளவில் வெள்ளைக் கற்களைக் கொண்டு வந்து 500 சிற்பிகளைப் பணியிலமர்த்தி உயர்வாகவும் விரிவாகவும் வெளிச்சம் மிக்கதாகவும் காற்றோட்டம் மிக்கதாகவும் கட்டியுள்ள திறம் வியந்து பாராட்டத்தக்கது.


இராஜகோபுர நிலைத் தூண்கள், முக மண்டப கர்ணக்கால் தூண்கள், மகா மண்டப வாயில் படிகள், விழா மண்டப அமைப்பு, கலங்காத கண்ட விநாயகர் கோயில் தூண் சிற்பங்கள், தெட்சிணாமூர்த்தி மண்டபக் கொடுங்கை, சிங்க அமைப்பு, கருவறைக் கபோதகச் சிற்பங்கள், கூடுகளில் காணப்படும் சிற்பங்கள் ஆகியன நகரத்தார் கலைப் பாணியை உலகம் உள்ளளவும் சொல்லிக் கொண்டே இருக்கும்.

இத்தனை மாண்புகள் மிகுந்த மாத்தூருக்கு நேரில் வந்து கண்ணாரக் கண்டு, மனதார வழிபாடு செய்தால் கலங்காத கண்டம் நமக்கு வாய்க்கும். திசைகள் ஆயிரத்திலும் நாம் ஐந்நூற்றுவரைப் போலச் சென்று வரலாம். பெரிய நாயகியின் திருவருளால் நாம் பெரிய பேரின்ப வாழ்க்கையைப் பெற்று மகிழலாம்!

வாழ்த்து

ஐந்நூற்று ஈசுவரர்
அருள் பெரிய நாயகியைக்
கைதொழுவார் அனைவருக்கும்
கற்பகமாய் வாழ்வமையும்.

மாத்தூர்க் கோயிலதன்
மாண்புகளைப் படித்தறிந்து
பார்த்தால் பரவசமே!
பரமனருள் கிடைத்திடுமே!!



Deivam Offset, Karaikudi.
Ph : 434961, 437843